புதுச்சேரி அரசு
(சுருக்கம்)

இந்து சமய நிறுவனங்கள்- புதுச்சேரி, அருள்மிகு மணக்குள விநாயகர் தேவஸ்தானத்திற்கு அறங்காவலர் வாரியம் அமைத்தல் - ஆணை - பிறப்பிக்கப்படுகிறது.

---

இந்து சமய நிலையங்கள் மற்றும் வக்ஃபு துறை

அரசு ஆணை ப.வ.எண்.124/இசநி/கோ.4/2021, புதுச்சேரி, நாள்:06.01.2021

பார்வை: 1) அரசு ஆணை ப.வ.எண்.51/இசநி/கோ.4/2003, நாள் 30.09.2003.
2) அரசு ஆணை ப.வ.எண்.07/இசநி/கோ.4/2005, நாள் 29.04.2005.
3) இந்து சமய நிறுவனங்கள் ஆணையர் அலுவலக கோப்பு எண்614/இசநி/கே.4/2020, நாள் 22.12.2020.

---

ஆணை:

பார்வையில் கண்ட அரசு ஆணைப்படி புதுச்சேரி, அருள்மிகு மணக்குள விநாயகர் தேவஸ்தானத்திற்கு பார்வை (1) & (2)-ல் கண்டுள்ள அரசு ஆணைகளின் மூலம் அமைக்கப்பட்ட அறங்காவலர் வாரியத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இவ்வறங்காவலர் வாரியத்தின் பதவிக்காலம் முடிவடைந்து விட்டது.

2. இந்நிலையில் மேற்குறிப்பிட்ட திருக்கோயிலை நிர்வகிப்பதற்கு ஒரு புதிய அறங்காவலர் வாரியம் அமைக்க வேண்டியது இன்றியமையாததாகிறது.

3. எனவே, 1972-ஆம் ஆண்டு புதுச்சேரி இந்து சமய நிறுவனங்கள் சட்டம் 4-ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தி, மேற்கூறிய திருக்கோயிலுக்கு ஐந்து நபர்களைக்கொண்ட ஓர் அறங்காவலர் வாரியத்தை அரசு உடனடியாக அமைக்கிறது

திருவாளர்கள்:

1. வெ. ராமச்சந்திரன், த/பெ வெங்கடரங்கா,
எண்.185, கல்வே சுப்புராய செட்டித் தெரு,
புதுச்சேரி ....தலைவர்

2. ப. கிருஷ்ணசாமி, த/பெ பழனிசாமி,
எண்.66, காமாட்சி அம்மன் கோயில் தெரு,
புதுச்சேரி ...துணைதலைவர்

3. கே. ஆர். ரமேஷ் குழந்தைராஜ், த/பெ ராமச்சந்திரன்,
எண். 50, சாய் வில்லா, ஆரோக்கியம்மாள் கார்டன்,
திருமுடி சேதுராமன் நகர், புதுச்சேரி ...செயலாளர்

4. த. காசிராஜா, த/பெ தருமராஜ்,
எண்.42, சாந்தி நிவாஸ்,
ராஜராஜேஸ்வரி நகர், புதுச்சேரி. ...பொருளாளர்

5. ம. ஜெயலட்சுமி, க/பெ மண்ணாங்கட்டி,
எண்.34, விநாயகர் கோயில் தெரு,
சாமிபிள்ளைத்தோட்டம், லாஸ்பேட்டை, புதுச்சேரி. ...உறுப்பினர்

4. புதிய அறங்காவலர் வாரியத்தினர் உடனடியாக திருக்கோயிலின் பொறுப்புக்களை அதன் அசையும், அசையாச் சொத்துக்கள் இதர ஆவணங்களுடன் ஏற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

5. 1972-ஆம் ஆண்டு புதுச்சேரி இந்து சமய நிறுவனங்கள் சட்டம் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளுக்குட்பட்டு அறங்காவலர் வாரியத்தினர் திருக்கோயிலை நிர்வகிக்கக் கடமைப்பட்டவர்களாவர். மேலும் நிர்வாகத்தினர் கடைப்பிடிக்க வேண்டிய சில முக்கிய பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(i) கோயிலுக்கு சொந்தமான காலி மனைகள், கோயிலை சுற்றியுள்ள இடங்கள் மற்றும் கோயில் குளங்களை தூர்வாருதல் / சுத்தம் செய்தல் இவைகளை உள்ளடக்கிய ஒரு ஆண்டறிக்கையினை சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) நன்கொடையாளர்களால் மேற்கொள்ளப்படும் பணிகளை நிறைவேற்ற முழு மூச்சுடன் ஈடுபடுதல் வேண்டும்.

(iii) ஒவ்வொரு வருடத்திற்குமான உத்தேச வரவு செலவு கணக்குகள் மார்ச் மாத காலத்திற்குள் சமர்ப்பித்தல் வேண்டும்

(iv) கோயில் வரவு செலவு கணக்குகளை முறையாக பராமரித்தல் மற்றும் கணக்ினை ஆண்டுக்கு ஒருமுறை கணக்கு மற்றும் கருவூலத் துறை மூலம் தணிக்கை செய்தலை உறுதி செய்ய வேண்டும்.

(v) அறங்காவலர் கடமைகளையும் பொறுப்புகளையும் இந்து சமய ஆலய விதிகள் 1975-ன் பிரிவு 5இன் படி செவ்வனே நிறைவேற்றுதல் வேண்டும்.

6. அறங்காவலர் வாரியத்தின் பதவிக்காலம் இவ்வரசாணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் ஆகும். இதற்கிடையில் அரசு அவர்களை நீக்கினால் தவிர அல்லது தகுதி இழக்கச் செய்தால் தவிர அல்லது வாரிய உறுப்பினர்கள் தங்கள் பதவிகளை இராஜினாமா செய்யுங்கால் அவர்களின் இராஜினாமாவை அரசு ஏற்றுக்கொண்டால் தவிர வாரிய உறுப்பினர்கள் பதவியில் இருப்பதாகக் கருதப்படும்.

/துணைநிலை ஆளுநரின் ஆணைப்படி/

06/01/2024

( அ. சிவசங்கரன்)
அரசு சார்புச் செயலர் (கோயில்கள்)

பெறுநர்:
திருவாளர்கள்:

1. வெ. ராமச்சந்திரன், தலைவர் த/பெ வெங்கட ரங்கா,
2. ப. கிருஷ்ணசாமி, துணைதலைவர் த/பெ பழனிசாமி,
3. கே.ஆர்.ரமேஷ் குழந்தைராஜ்,செயலாளர் த/பெ ராஜாராம்,
4. த. காசிராஜா, பொருளாளர் த/பெ தருமராஜ்,
5. ம. ஜெயலட்சுமி, உறுப்பினர் க/பெ மண்ணாங்கட்டி

இவ்வரசாணை கிடைக்கப்பெற்ற ஒரு வாரகாலத்திற்குள், திருக்கோயிலின் பொறுப்புக்- களை அதன் அசையும், அசையாச் சொத்துக்கள் இதர ஆவணங்களுடன் பதவி விலகும் அறங்காவலர் வாரியத்திடமிருந்து முழுமையாகப் பெற்றுக்கொண்டு, அதுகுறித்து ஓர் அறிக்கையை பட்டியல் நகலொன்றுடன் ஆணையர், இந்து சமய நிறுவனங்கள், புதுச்சேரி அவர்களுக்கு நேரில் சமர்ப்பிக்குமாறும், அவ்வறிக்கையின் நகலொன்றினை துணை இயக்குநர், கணக்கு மற்றும் கருவூல இயக்ககம் (ஆலய தணிக்கை மற்றும் ஆய்வுப் பிரிவு), புதுச்சேரி அவர்களுக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்படுகிறது.

நகல் பெறுநர்

திருவாளர்கள்:

1. ராமச்சந்திரன், த/பெ வெங்கட ரங்கா, (தலைவர்) எண்.185, கல்வே சுப்புராய செட்டித் தெரு, புதுச்சேரி
2. குணசேகரன், த/பெ சுப்ரமணியன், (செயலாளர்) எண்.147, நீடராஜப்பையர் வீதி, புதுச்சேரி
3. ஆனந்த ரவிசங்கர், த/பெ கிருஷ்ணசாமிப்பிள்ளை,(பொருளாளர்) எண்.69, ஆனந்தரங்கப்பிள்ளை வீதி, புதுச்சேரி
4. பரசுராமன், த/பெ முத்துகிருஷ்ணன், (உறுப்பினர்) எண்.25, 3வது குறுக்கு தெரு, கம்பன் நகர், புதுச்சேரி

திருக்கோயிலின் பொறுப்புக்களை அதன் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் இதர ஆவணங்களுடன் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அறங்காவலர் வாரியத்திடம் ஒருவார காலத்திற்குள் முழுமையாக ஒப்படைக்குமாறு கோரப்படுகிறது.

5. மேதகு துணைநிலை ஆளுநரின் தனிச்செயலர், ராஜ் நிவாஸ், புதுச்சேரி.
6. இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, புதுச்சேரி - மேற்காண் அரசு ஆணையை அரசிதழில் வெளியிட்டு அதன் பத்து நகல்களை இவ்வலுவலகத்திற்கு அனுப்புமாறு கோரப்படுகிறது.
7. ஆணையர், இந்து சமய நிறுவனங்கள், புதுச்சேரி.
8. துணை இயக்குநர், கணக்கு மற்றும் கருவூல இயக்ககம் (ஆலய தணிக்கை மற்றும் ஆய்வுப் பிரிவு), புதுச்சேரி.
9. காவல்துறை கண்காணிப்பாளர் (வடக்கு), புதுச்சேரி.
10. காவல்துறை கண்காணிப்பாளர் (மேற்கு), புதுச்சேரி.
11. துணை மாவட்ட ஆட்சியர் (வருவாய்) வடக்கு, புதுச்சேரி.
12. அரசு ஆணை கோப்பு/மேலாளர்/நிர்வாக அதிகாரி/ கோ.1/ கோ.5/ கோ.6/ ஆதஉ/ கணினி/ உதிரிகள்.